சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 65/2014

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் நாள் **Dw**1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 10.11.2025

**Dw**1 (விஸ்வநாதன்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதி தரப்பில்)**

30.09.1988 ம் ஆண்டு தாவா சொத்தின் ஒரு பகுதியை பரமசிவத்திற்கு (5 ம் பிரதிவாதி) விற்பனை செய்ததாக நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன், அதை நானும் என் தகப்பனாரும் சேர்ந்து விற்பனை செய்தோம். அந்த கிரய ஆவணம் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அது **வாசாஆ** 12. அந்த கிரய ஆவணத்தில் நாங்கள் விற்பனை செய்த சொத்து எங்களுக்கு பாரம்பரியமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த சொத்தில் எனக்கு பங்கு இருப்பதால் தான் நான் என் தகப்பனாருடன் சேர்ந்த விற்பனை செய்துள்ளேன். மேற்படி கிரயத்தின்போது என் சகோதரி வாதி சாமியாத்தாளுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். நாங்கள் விற்பனை செய்த சொத்தில் வாதிக்கும் பங்கு உள்ளது. விற்பனை செய்த சொத்தில் வாதிக்கும் பங்கு உள்ளது என்றால் பங்கு இல்லை. வாசாஆ 9 ல் வாசாஆ 12 ஆவணம் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பரமசிவம் 5 ம் பிரதிவாதி எனக்கு மாமன் மைத்துனர் உறவு முறை. தாவா சொத்தில் உள்ள வீட்டை நான் கட்டினேன் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் ஊர் மக்கள் தான் உள்ளனர். அது தொடர்பான ஆவணம் என்னால் தாக்கல் செய்ய முடியும். வாசாஆ 11 ல் உள்ள சொத்து புல எண் 1260/11 சி என உள்ளது. பிரச்சினைக்குள்ள வீடு 1260/11 பி ல் அமைந்துள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியப்பாவின் சொத்து மேற்கே புல எண் 1260/11 ஏ ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிசாஆ 1 முதல் 6 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். விஸ்வநாதன் குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கே யார் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விலாசத்தில் சுமார் 40 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். என் பெற்றோர் அந்த வீட்டில் தான் குடியிருந்தனர் என்றால் சரிதான். என் சகோதரி வாதியும் அந்த வீட்டில் தான் வளர்ந்தார் என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கே சக்தி சம்பூரணம் என்பவர் அவருக்கு

பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்து அதை வாங்கியவர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் எங்கள் சொத்திற்கு தெற்கே என்று தான் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் வேறு யாருக்கும் பாத்தியம் இல்லை என நான் சொல்லியுள்ள விவரம் சரியானது தான். தாவா 2 ம் இன சொத்தில் என் மனைவிக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு மேற்படி சொத்து பாத்தியம் என நான் கிராம நிர்வாக அலுவலரிடம் என் மனைவி பெயரில் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றதாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கு முடிந்து விட்டது. என் மோசடிக்கு உதவி செய்வதற்காக என் சகோதரி சாமியாத்தாளை நான் கட்டாயப்படுத்தினேன் என்றும் அதனால் தான் இந்த வழகக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டின் சர்வே எண் 1260/11 பி என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் சகோதரிக்கு பாகம் இல்லை என சொல்வதற்கு என்ன காரணம் என்றால் என் தகப்பாரின் சொத்து என்பதால் என் சகோதரிக்கு பாத்தியம் இல்லை. எதிரிடை பாத்தியம் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. ஆழ்குழாய் கிணறு தாவாவிற்கு பின்பு போடப்பட்டது என்றால் தாவாவிற்கு முன்பே போடப்பட்டுவிட்டது. என் தகப்பனாரிடம் வாங்கிய சொத்தில் (வாசாஆ 9)ஆழ்குழாய் கிணறு பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் ஆழ்குழாய் கிணறு பற்றி எழுதப்படவில்லை என்றால சரியல்ல. வாதி தாவாவில் காண்பித்துள்ள கிணறு பொதுக் கிணறு ஆகும். என் தகப்பனார் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் அவர் படுத்த படுக்கையாக உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் வாசாஆ 9 விடுதலை ஆவணம் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் கூடுதல்எதிர்வழக்குரையில் என் சகோதரிகள் விடுதலை எழுதி கொடுத்துள்ளார்கள் என சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் மூத்த சகோதரி மற்றும் என் தகப்பனார் 3/5 பாகம் எழுதி கொடுத்துவிட்டதால் அவர்கள் இந்த சொத்திற்கு தொடர்பில்லை என்றால் ஆமாம். எனது எதிர்வாதம் தாவா சொத்து முழுவதுமாக எனக்கு பாத்தியம் என்பது தான். வருவாய் ஆவணங்கள் பெயர் மாற்றம் குறித்து நான் கொடுத்த மனுவின் நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. உண்மை விவரங்களை மறைத்து தான் பட்டா விவரங்கள் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகரிய பரிகாரம்

அவருக்கு கிடைக்கத்தக்கல் என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் நிராகரிக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை (6 ம் பிரதிவாதி தரப்பில்)**</u>

தாவா முதல் இன சொத்தில் 30.09.1988 ல் ஏக்கர் 0.39 6 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் குடும்ப பொது கடன்களை தீர்ப்பதற்காக சொத்து விற்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் விற்பனை செய்த சொத்து செக்குபந்தி கண்டு தான் விற்றுள்ளோம் என்றால் சரி. நாங்கள் விற்பனை செய்த சொத்தில் 6 ம் பிரதிவாதி அனுபவத்தில் இருக்கிறார் என்றால் ஆமாம். கடன் எவ்வளவு என்றால் ரூ.25000/-. 6 ம் பிரதிவாதி வழக்கிற்கு அவசிய தரப்பினர் அல்ல என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.10 17:34:57 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS